**செப்டம்பர் - 23**

**"பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராட வேண்டும்." - யூதா 3.**

நம்முடைய விசுவாசத்தின் நல்லபோராட்டம் அதிகமான அளவு தேவனுடைய வார்த்தையை நாம் தற்காப்பதில் அடங்கி இருக்கிறது. அதில் தேவனுடைய குணத்தை தற்காப்பதும் அடங்கியிருக்கிறது. இது என்ன விளைவு ஏற்பட்டாலும், தாக்குகிறவர்கள் எத்தனை பேராயிருந்தாலும், சத்தியத்திற்காக நிற்க நமக்கிருக்கும் இஷ்டத்தைக் குறிக்கிறது. அதாவது, கர்த்தரும் அப்போஸ்தலரும் அறிவித்திருக்கிறதும், தேவனுக்கு ஸ்தோத்திரம் எல்லா ஜனங்களுக்கும் உரியதாயிருக்கப் போகிறதுமான மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும். நற்செய்தியை தப்பாய் எடுத்துக் காட்டுகிற சமயக்கோட்பாட்டுக்கும் மனிதரின் கற்பனைக்கும் விரோதமாக எதிர்த்து நிற்பதைக் குறிக்கிறது. திரும்பவும் அப்போஸ்தலன் சொல்லுகிற பிரகாரமாக, "சுவிசேஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்தப்பட்டவன்." சத்தியத்தைத் தற்காப்பதைத் தவிர குறைவானதொன்றையும் நம்மால் செய்யக்கூடாது. சத்தியம் தேவனுடைய பிரதிநிதி, கிறிஸ்துவின் பிரதிநிதி, ஆகையால் அதுவே நமது கொடி. உண்மையுள்ள போர்ச் சேவகர்களாக நாம் நமது கொடியை மரணபரியந்தம் காப்பாற்ற வேண்டும். **- Z ’03, 423 (R 3272)**

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம் தம்முடைய சுவிசேஷயுக ஜனங்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வேதாகமத்தின் உபதேசங்களையும், கட்டளைகளையும், வாக்குத்தத்தங்களையும், புத்திமதிகளையும், தீர்க்கதரிசனங்களையும், சரித்திரங்களையும், அடையாளங்களையும் கொண்டதாயிருக்கிறது. விழுந்துபோன தூதர்களும் மனிதரும் திரட்டக்கூடிய எல்லாத் திறமையோடும் துர்குணத்தோடும் இவைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. தாக்குதல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும்பொழுது தைரியமில்லாத கோழைகளாக நாம் செயல்படாமல் அனுமதிப்போமானால், தேவனுடைய வாக்கியங்களை பாதுகாக்கிறவர்களாக நாம் நமது உக்கிராண வேலைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க மாட்டோம். நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டு சத்தியத்திற்கு எதிராக வருகிற வஞ்சகங்களின் தாக்குதலை எதிர்க்க வேண்டும். தாக்குதலை மேற்கொண்டு நம்முடைய எல்லா ஞானத்தோடும், வல்லமையோடும், நீதியோடும், அன்போடும் எதிர்க்கும் தப்பான உபதேசங்களை அழிக்கவும், கைதிகளாயிருக்கிற நம்முடைய சகோதரரையும், சிநேகிதரையும் அவைகளின் கட்டுகளிலிருந்து விடுவிக்கவும் வேண்டும்.
**- P ’26, 125, 126.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**அப் 17:2; 18:4,19; 20:27; 24:25; 1கொரி 9:23-27; கலா 2:2-5,12-14; 5:7; 2பேது 2:1; பிலி 2:16; 2தீமோ 2:5; 4:7.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 215 (R 5056).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சத்தியத்தைப் பாதுகாத்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?**